(பிற்பகல் 1.40)

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(உ) பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் பற்றிய விவரங்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையை ஒத்திவைக்கும் முன் சில விவரங்களை பேரவைக்கு அறிவிக்க விரும்புகிறேன்.

ஏழாவது சட்டமன்றப் பேரவையின் நான்காவது கூட்டத் தொடரில் 1982-83 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் 26-2.1982 அன்று பேரவையில் அளிக்கப் பெற்றது. அன்று முதல் இன்றோடு சட்டமன்றப் பேரவை கூடிய

மொத்த நாட்கள்	32.
மொத்த நேரம்	178 மணி 36 நிமிடம்

நிதி அலுவல்கள் 1982-83—

வரவு செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம் நடைபெற்றது ..	7 நாட்கள்.
மானியக் கோரிக்கைகளின் மீது விவாதமும் வாக்கெடுப்பும் நடைபெற்றது	18 நாட்கள்.
நிதி ஒதுக்க மசோதா மீது விவாதம் ..	1 நாள்.

மானியக் கோரிக்கைகள்—

கொடுக்கப் பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ..	3,319
அனுமதிக்கப் பெற்றவை	3,100
விவாதிக்கப் பெற்று நிறைவேறிய மானியக் கோரிக்கைகள்	51
விவாதிக்கப் பெறாமல் 'கில்லெட்டின்' ஆனது	5
உறுப்பினர்கள் ஆற்றிய உரைகள்	297
எடுத்துக் கொண்ட மொத்த நேரம்	80 மணி 29 நிமிடம்

இறுதி துணை நிதி அறிக்கை—

பேரவையில் அளிக்கப் பெற்றது	22-3-1982
விவாதிக்கப் பெற்று நிறைவேறியது	1 நாள்

வினாக்கள்—

விடையளிக்கப் பெற்றவை:-	
குறுகிய கால வினாக்கள்	2
உடுக்குறியிடாத வினாக்கள்	900
உடுக்குறியிட்ட வினாக்கள்	509
மொத்த துணை வினாக்கள்	1,565

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அரை மணி நேரம் விவாதம் நடைபெற்றது ..	1 நாள்
ஒரு மணி நேரம் விவாதம் நடைபெற்றது ..	1 நாள்

கவன ஈர்ப்புத் தீர்மானங்கள்—

வரப்பெற்றவை	330
அனுமதி மறுக்கப்பெற்றவை	248
அனுமதிக்கப் பெற்றவை	90
	(55 பொருள் குறித்து)
பேரவையில் எடுத்துக்கொள்ளப் பெற்றவை	66
	(43 பொருள் குறித்து)

ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—

வரப்பெற்றவை மொத்தம்	474
தள்ளப்பெற்றவை	274
கவன ஈர்ப்பாக மாற்றப் பெற்றவை	40
பேரவையில் எடுத்துக்கொள்ளப் பெற்றவை	148
	(24 பொருள் குறித்து)

சட்ட முன்வடிவுகள்—

வரப்பெற்றவை	21
நிறைவேற்றப் பெற்றவை	27
குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப் பெற்றவை ..	2

அரசினர் தீர்மானம்—

வரப்பெற்றவை	2
நிறைவேற்றப்பெற்றவை	2

தனியார் அலுவல்கள்—

வரப்பெற்ற தனியார் தீர்மானங்கள்	3
அனுமதிக்கப் பெற்றவை	2
தனியார் அலுவல் எடுத்துக்கொள்ளப் பெற்றது ..	1 நாள்

பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்—

அ. சட்டப்படியான விதிகளும் ஆணைகளும் ..	69
ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்	153

பார்வையாளர்—

மாடத்தில் அனுமதிக்கப்பெற்ற—

ஆண்கள்	36,964
பெண்கள்	5,048

பேரவைத் தலைவர் மாடத்தில் அனுமதிக்கப் பெற்றவர்கள்	12,609
வருகை தந்துள்ள பார்வையாளர்கள் (மொத்தம்)	54,621
சட்டமன்ற நூலகத்திற்கு வருகை தந்திருப்பவர்கள்	820

''லெஜிஸ்-அலர்ட்'' என்பதாக கட்டுரைத் தொகுப்பு இதுவரை 10 இதழ்களாக சுமார் 750 கட்டுரைகள் பல்வேறு இதழ்களிலிருந்து பொருள் வாரியாக தொகுக்கப் பெற்று உறுப்பினர்களுக்கு அனுப்ப பெற்றுள்ளன.

பேரவை நடவடிக்கைகள்	
தட்டச்சு செய்யப் பெற்றுள்ள பக்கங்கள்	6,902
பேரவைக் கூட்டம் நடைபெற்ற எல்லா நாட்களிலும் வருகை தந்துள்ள உறுப்பினர்கள்	7 பேர்

பேரவை நிகழ்ச்சிகளை நல்லமுறையில் நடத்திச் செல்ல எங்களுக்கு ஒத்துழைப்புத் தந்த அவை உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். செய்தியாளர்களுக்கும் நம்முடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் அவை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற நமக்கு மிகவும் ஒத்துழைப்புத் தந்த சட்டமன்றப் பேரவைச் செயலாளர் திரு. அழகர்சாமி அவர்களுக்கும், சட்டமன்ற அலுவலாளர்கள் அனைவருக்கும் நம்முடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாள் குறிப்பிடப்பெறாமல் பேரவையை ஒத்தி வைப்பதற்கு அமைச்சர் அவர்கள் இப்போது தீர்மானத்தை மொழிவார்கள்.

9 அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவை ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். ''பேரவையின் 25 (1) விதியின் படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பெற வேண்டும்.''

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, எங்களுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிற அந்த அறிவிப்பில் ஜுலை மாதம் சட்டமன்றம் கூடும் என்று இங்கேயும் அறிவித்து, அது செய்தியில் வந்திருக்கிறது. ஆனால் திடீரென்று நாள் குறிப்பிடாமல் ஒத்தி வைப்போம் என்று சொல்வது ஏற்கனவே அங்கத்தினர்களுக்கு தெரிவித்ததற்கு முரணாக இருக்கிறதே, அதனுடைய விவரம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும்.